**NP – 040**

## I Semester B.A./B.A. (Home Science)/B.A. (Fine Arts) B.A. (Maths)/B.A. (Music)/B.V.A./B.P.A. Examination, May 2022
## (NEP-2021-22 and Onwards)
## TAMIL LANGUAGE (Paper – I) (Part – I)

Time : 2½ Hours

Max. Marks : 60

### SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **(5×1=5)**

1) முல்லைப் பாட்டு இவற்றில் ஒன்று

1) எட்டுத்தொகை
2) பத்துப்பாட்டு
3) சிற்றிலக்கியங்கள்
4) பதினெண்கீழ்க்கணக்கு

2) கொடுப்பதூஉம்-என்பது

1) செய்யுளிசை அளபெடை
2) இன்னிசை அளபெடை
3) சொல்லிசை அளபெடை
4) குற்றியலுகரம்

3) ஐந்திணை ஐம்பதின் ஆசிரியர்

1) மாறன் பொறையனார்
2) நக்கீரர்
3) கபிலர்
4) மாறோக்கத்து நப்பசலையார்

4) புறநானூறு என்பது

1) அகஇலக்கியம்
2) புறஇலக்கியம்
3) இலக்கண நூல்
4) நாடக நூல்

5) குறட்டை ஒலி-இச்சிறுகதையின் ஆசிரியர்

1) புதுமைப்பித்தன்
2) ஜெயகாந்தன்
3) மு.அழகிரிசாமி
4) மு.வரதராசன்

P.T.O.

II. எவையேனும் ஐந்திற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. (5×3=15)

1) திருவொடுங்கும் மென்சாயல் தேம்கோதை மாதர்
உருவொடுங்கும் உள்ளுருகி நின்று

2) யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே

3) கோடுகொண்டு எழுந்த கொடும் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை

4) யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா

5) பைங்கொடி முல்லை அவிழ்அரும்பு ஈன்றன
வம்ப மழையுறக் கேட்டு

6) 'அந்த நாய் காலையிலே போனது இன்னும் வரவில்லை
அத்தை, பால் இல்லாமல் குட்டி எல்லாம் கத்துது'

7) 'இதுவா ? ரெண்டு நாளைக்கு முன்னாலே தெக்கே ஒரு
கூட்டம்...கூட்டத்திலே கொஞ்சம் கலாட்டா நடந்துச்சு...!
அப்பம் விரல்ல அடிபட்டுட்டுது...'

8) 'எளச்ச எடத்துல பொண்ண எடுக்கணும் ; வலுத்த எடத்துல
பொண்ணக் கொடுக்கணும்' என்று ஆயா சொல்லியது
நினைவிற்கு வந்தது.

## SECTION – B

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக. (5×4=20)

1) உயிர்மெய் எழுத்துகள் பிறக்கும் முறை குறித்து எழுதுக.

2) சார்பெழுத்துகள் என்றால் என்ன ? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

3) போலியின் வகைகளைச் சான்றுடன் கூறுக.

4) மொழியின் இறுதியில் வரும் எழுத்துகளைச் சான்றுடன் குறிப்பிடுக.

5) காவற்பெண்டுவின் வீரவுரைகளைப் புறநானூறு எவ்வாறு கூறுகிறது ?

6) ஐந்திணை ஐம்பது கூறும் பாலைத் திணையின் அன்புக் காட்சியை விளக்குக.

7) குறட்டை ஒலி-என்ற சிறுகதையின் கருவை விளக்குக.

8) வலி-என்னும் சிறுகதையின் தலைப்பைப் பொருத்திக் காட்டுக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×5=20)**

1) மாறோக்கத்து நப்பசலையார், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை எவ்வாறு பாடியுள்ளார் ?

2) தலைவியின் துயர்தீர்க்க விரைந்த தலைவன் குறித்து முல்லைப்பாட்டு கூறுவன யாவை ?

3) தலைவி நண்டை நோக்கிக் கூறுவனவற்றை ஐந்திணை ஐம்பது எவ்வாறு சித்தரிக்கின்றது ?

4) 'ராஜா வந்திருக்கிறார்' -என்ற சிறுகதையின் கருப்பொருளை விளக்குக.

5) 'புலிக் கலைஞனின்' பாத்திரப் படைப்பைச் சுருக்கி வரைக.

6) 'உயிர்க்கருவாடுகள்'-என்ற சிறுகதையின் தலைப்புப் பொருத்தத்தை எழுதுக.

---